## காரைக்கால் நகராட்சி

******

### ஆணையரின் செய்திக்குறிப்பு

## இறுதி எச்சரிக்கை அறிவிப்பு

காரைக்கால் நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளில் பல்வேறு வீடுகள், அடுக்கு மாடிக்கட்டடங்கள், வியாபார நிறுவனங்கள், தங்கும் விடுதிகள், உணவகங்கள் ஆகியவற்றில் நீண்ட காலமாக சொத்து வரி செலுத்தாமல் உள்ளனர். மேலும், வியாபார நிறுவனங்களில் கட்ட வேண்டிய உரிமம் **(License)** தொகையையும் செலுத்தப்படாமல் உள்ளது. இதனால், நகராட்சி நிர்வாகத்துக்கு பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனவே, காரைக்கால் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, தொழில் உரிமம் **(License)** மற்றும் தொழில் வரி **(Professional Tax)** ஆகியவற்றை இந்த அறிவிப்பு கண்ட 7 (ஏழு) தினங்களுக்குள் செலுத்த வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. மேலும், புதிதாக கட்டிடம் கட்டுபவர்கள், கட்டிடங்களை விரிவு படுத்தி உள்ளவர்கள் தாங்களாகவே முன் வந்து உரிய சான்றுகளை நகராட்சிக்கு கொண்டு வந்தால் , புதிய வரிகள் விதிக்கப்படும். தவறும் பட்சத்தில், புதுச்சேரி நகராட்சி விதிகள் 1973 பிரிவு 177-ன் படி தங்களது அசையும் சொத்துக்களை ஜப்தி செய்வதுடன் மின் இணைப்பு மற்றும் குடி நீர் இணைப்பு ஆகியவை உடனடியாக துண்டிக்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்படும் என பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஆணையர்
காரைக்கால் நகராட்சி